1982 மார்ச் 4]

திரு. எஸ். ஆண்டித் தேவர் : ஒரு தவறான முன்மாதிரி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நான் பேராசிரியருக்காகச் சொல்லவில்லை. பெரிய கட்சிகள், சிறிய கட்சிகள் என்று பார்க்கக் கூடாது. அவர்களுக்கு ஒரே கேள்வியிலே நான்கு முறை பேச அனுமதித்திருக்கிறீர்கள். காலையிலிருந்து நெடுமாறன் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார், அவரை நீங்கள் அனுமதிக்கவில்லை. இது தவறான முன் மாதிரியாகும்.

திரு. அ. ரகுமான்கான் : கேள்விகளைச் சேர்த்து எடுத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்டித்தேவருக்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நான் அனைவருக்கும்தான் வாய்ப்பு கொடுத்து இருக்கிறேன். புருஷோத்தமன் முதல் கேள்வி போட்டார் இரண்டாவது கேள்வியை திரு. ரமணி போட்டார். இரண்டு பேர்களுக்கும் நான்கு கேள்விகள் கொடுக்கப்பட்டன. அது முடிந்த பின்பு ஆளுங்கட்சியின் சார்பில் திரு. வி. பி. பாலசுப்பிரமணியத்திற்கு வாய்ப்பு தரப்பட்டது. பின்னர் திரு. ஹாஜாசெரீப் அவர்களுக்கும் அதன் பிறகு திரு. வி. கிருஷ்ணமூர்த்திக்கும் வாய்ப்புகள் தரப்பட்டன. அதன் பிறகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில் பேராசிரியர் அவர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டது. இப்போது திரு. நெடுமாறன் அவர்களை அழைத்திருக்கிறேன். இத்துடன் இந்தக் கேள்விக்கு 30 நிமிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. கேள்வி கேட்டவர்களைத் தவிர, மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கேள்வி கேட்டவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். அதிலே எந்த தயவு தாட்சண்யமும் கிடையாது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசு புதிதாக கப்பல்கள் வாங்காமல் பம்பாயில் உள்ள நிறுவனம் ஒன்றில் குத்தகைக்கு பெற்றுக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசு தமிழக அரசாங்கத்தை நிர்ப்பந்தம் செய்வது உண்மையா? அதன் விளைவாக தமிழக அரசாங்கத்திற்கு அதிகமான நஷ்டம் வரும் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படி மத்திய அரசாங்கத்தினுடைய வேறு கப்பல்களை எடுத்து நாம் பயன்படுத்தினால் நிச்சயம் நஷ்டம் வரும். பதினொன்று கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆனால் நம்மை நிர்ப்பந்தம் படுத்தியிருக்கிறார்கள் என்ற தகவல் இங்கே இல்லை.

*** வினா எண் 357—திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. நா. பழனிவேல் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனில் கழிந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

(ஆ) நட்டம் ஏற்படக் காரணங்கள் யாவை?

(இ) நட்டம் ஏற்படாது இருக்க எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ)

		ரூபாய் இலட்சத்தில்
1979—80	இழப்பு	— 38.10
1980—81	இலாபம்	+ 22.51
ஆக இரண்டாண்டில் மொத்த இழப்பு		— 15.59

(ஆ) 1974-ல் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால் வாங்கப் பட்ட "தமிழ் அண்ணா", "தமிழ்ப் பெரியார்" என்னும் கப்பல்கள், வாங்கும்போது சுமார் 17 வயதடைந்திருந்தன. இரண்டு கப்பல்களும் வயதடைந்திருந்ததாலும், செலவுமிக்க பழுதுகள் மிக அதிகமாக இருந்ததால் தேய்மானக் கணக்கில் கழகத்திற்கு ரூ. 9.33 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் தேய்மானத்துடன் ரூ. 38.10 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

(இ) 1974-ல் வாங்கப்பட்ட இரண்டு கப்பல்களும் வயதானதாக இருந்ததாலும், மேற்கொண்டு உபயோகப்படுத்த பழுதுபார்க்கும் செலவு அதிகமாக செய்ய வேண்டியிருந்ததாலும், இந்திய அரசு நிறுவனமான கல்கத்தாவிலுள்ள உலோக சிதைவு வாணிபக் கழகம் Metal Scrap Trade Corporation மூலம் சிதைவுக்கு விற்கப்பட்டன.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலமாக வாடகைக்குக் கப்பல்களை அமர்த்தி, அதன் மூலம் நமக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றிவருவதற் கான நிலையில் நமக்கு ஏற்பட்ட நஷ்டம் அதிகமா? அல்லது நாமே கப்பல்களை வாங்கி அதன் மூலம் நிலக்கரியை ஏற்றிவருவதால் ஏற்பட்ட நஷ்டம் அதிகமா? இதன் விவரம் கூற இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே நாம் விற்றுவிட்ட கப்பல்கள் வாங்குவதற்கு முன்னாலே வாடகைக்கு பெறப் பட்டதற்கான கணக்குகள் என்னிடத்திலே இல்லை. இந்த இரண்டு ஆண்டு களுக்கான கணக்குகள்தான் இருக்கின்றன. அதற்கு முன்னாலே இருந்ததை ஒப்பிட்டுப் பார்த்து சொல்லும்படியான கணக்குகள் என்னிடத்திலே இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் அண்மையில் கப்பல் வாங்குவது சம்பந்தமாக மத்திய கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு எழுதிய

1982 மார்ச் 4]

கடிதத்தின் விவரங்களையும், அதற்கு மத்திய கப்பல் போக்குவரத்துக் கழகம் எழுதிய பதில் விவரங்களையும்—அது மிக முக்கியமான விஷயமாக இருப்பதால்—சபையில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், அதற்கும் இதற்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை. அது தேவை என்று தனியாகக் கேட்டால், அதைப்பற்றி சிந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

அரசு கட்டுமான பணிகளுக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும் திட்டம்.

*** வினா எண் 359.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரசு கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை Rate உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பொதுப்பணித்துறையைச் சார்ந்த வட்டங்கள் அளவில், ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் புதிய விலை விவரப்பட்டியல்கள் Shedule of Rates தயாரிக்கப்படுகிறது. ஒப்பந்தக்காரர்கள் அளித்திடும் விலை விவரங்கள் இத்துடன் ஒப்பிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியேற்கும் அதிகார வரம்பிற்கு உட்பட்டவாறு ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும் சூழ்நிலை எதும் எழவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை சார்ந்த கட்டுமானப் பணிகளை ஒப்பந்தக் காரர்கள் ஒப்பந்தம் கேட்டு எடுத்தபின்பு, அரசாங்கம் குறிப்பிட்டுச் சொல்கிற அந்தத் தேதிக்குள் அந்தப் பணிகளை முடித்துக்கொடுக்காமல், காலதாமதம் செய்கின்றனர். இதனால் அரசாங்கத்திற்கும் பெயர் கெடுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் பொதுப்பணித் துறை கட்டுமானப் பணிகள், மற்றும் மிகமிக முக்கிய பணிகளை இந்த ஒப்பந்தக்காரர்களிடத்தில் கொடுக்காமல், அரசாங்கமே ஒரு தனி நிறுவனத்தின் மூலம் இந்தக் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு முன்வருமா ? அத்தகைய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்களின் இந்த நிலைமையின் காரணமாக பொதுப்பணித் துறைக்கு ஏற்பட்டு வருகிற அவப்பெயரைத் தடுக்கும் விதத்தில், தற்போது